**சுனாமி**

ஜப்பான் வார்த்தையை நாங்கள்
இப்படியா தெரிந்துகொள்ள வேண்டும் !

இங்கு கிளிஞ்சள்கள் பொறுக்கிய நாள் போய்
பிணங்களை பொறுக்கும் நாள் வந்துவிட்டது.

கடலே! நாங்கள் உன்னை கரையில்
இருந்து பார்ப்பது அழகு,
ந எங்களை வந்து பார்ப்பது
ஆபத்து ... உனக்கல்ல எங்களுக்கு.

பிரபஞ்சத்தில் முக்கால் பாகம்
உனக்கு போதாதா?
எங்கள் கண்ணீர் உன்னை
இன்னும் உப்பாக்க வேண்டுமா?

பூமித்தாயின் கோபத்திற்க்கு பயந்து
நீ இங்கு ஒடி வந்தால்
எங்கள் உயிர் (உடலும்) காணாமல் போகும்.

எத்தனை உ(டல்)யிர்கள் காணாமல் போனாலும்
இருக்கின்ற உயிர்கள் ஒன்றுபடுவோம்
இயற்கையை வெறுக்க அல்ல துயரத்தை துடைக்க.

**நான் இறந்தவன்**

எனக்கு மாலைகள் விழும் பொழுது
கரவொலிக்கு பதில் அழுகுரல் ஒலிக்கின்றது.

எனது கடைசி பயணத்திற்கு
அமரர் ஊர்தி தயாராகிவிட்டது.

ஊர்வலத்தோடு போய் என்னை மட்டும்
விட்டு வர சொந்தங்கள் சோகத்தோடு இருக்கின்றனர்.

இப்பயணம் முடித்துவிட்டேன் இனி பயணம்
எப்பொழுது கேட்டு வர போகின்றேன்.

கடவுள் என்னை கேட்கலாம்…நீ வந்தாய்
உடல் இல்லை உடல் இருந்தபொழுது நீ இல்லை.

கடவுளிடம் நானும் கேட்பேன் என்னை
இப்பொழுது சற்று உயிர்ப்பியுங்கள்

இறந்த பிறகு தான் ஞானம் வந்தது,
இதை மட்டும் சொல்லிக்கொள்கிறேன்:-

வெறுப்பு வெளியே போகட்டும்
காதல் உள்ளே வரட்டும்

சோகம் வெளியே போகட்டும்
மகிழ்ச்சி உள்ளே வரட்டும்

பேய்கள் வெளியே போகட்டும்
தெய்வம் உள்ளே வரட்டும்

உடல் தான எண்ணம் உள்ளே வரட்டும்
நன்றி கடவுளே…இப்பொழுது உயிர் வெளியே போகட்டும்.

நான் இனி நினைவில் மட்டும் இருப்பவன்.

விழுந்து நீ அழுதாலும் நான் எழப்போவதில்லை
யோசித்து நீ எழுந்தால் நல்ல பாதையில் ஒடிக்கொண்டிருப்பாய்.

**எம் ஆர் டி காதல்**

ஜூரொங் கிழக்கில் ரயில் ஏறியதும்
ரயிலிக்குள் உதித்தது சூரியன்

ரயிலுக்குள் சூரியனா! ஆம் அவள் முதல் பார்வை
இன்று முதல் என் ஒரே பாவை.

ரயிலுக்கு இணையாய் என் மனதும் தட தட...
உலகத்தில் எல்லாம் பொய் என்று இருந்தேன்
முதல் மெய் மட்டும் பார்த்தவுடன் காதல் ஆனது.

அலங்காரம் செய்து தூங்கும் பெண்கள்,
அளவே இல்லாமல் பேசும் விடலைகள்,
தான் மட்டும்தான் இந்த உலகில் என்று சில ஆண்கள்,
தனித்தனி உலகத்தில் எலக்ட்ரானிக் கருவிகளோடு சில பேர்கள்.
நானும் அவளும் மட்டும் தான் உயிரொடு இருக்கின்றோம்.

எல்லொரையும் சுமந்த ரயில் கட்டை நிலத்தில் நிற்க,
அவள் பக்கத்தில் வெற்று இடம் என் வெற்றி இடம்.
முழு ஆசையோடு நான் உட்கார
அரை மனதாய் அவள் நகர்ந்தாள்.

தோப்பாயோ என்ற நிலையம் வர
காதலில் ஜெயிப்பாயோ என்றது என் எண்ணம்.

நகர மண்டபத்தில் எழுந்த என் தேவதை
ராஜாவாய் வந்த அவள் காதலனை
கட்டிப்பிடித்து முத்தம் தந்தாள்.

காதல் அலையாய் இருந்த நான்
கரையில் விழுந்து கடல் சேர்ந்தேன்.

**காந்தி**

கூன் விழுந்து மெலிந்த உடல்...
முன் வழுக்கை கருப்பு நிறம்...
உருவத்தை எப்படி வேண்டுமானாலும் வெள்ளையர்கள் சொல்லியிருக்கலாம்
எங்களுக்கு அவர் 'மகாத்மா'.

**காதலி**

அப்பொழுது...
ஓடும் எக்ஸ்பிரஸ் ரயிலில் நான் உட்கார்ந்து பார்த்த நிலா.
இப்பொழுது...
கண்களில் கண்ணீர் நிரம்ப நான் பார்க்கும் பிம்பம்.

**முத்தம்**

அவள் இதழ் புல்லாங்குழலில்
நான் என் இதழ் கொண்டு இசைக்கும் ராகம்.

**யானை**

கருப்பு மேகம் மண்ணில் மணிகட்டி தவழ்கிறது ... யானை

**வாகனம்**

வேகச்சாலையில் ஓர் வாகனம் மட்டும் ஓட்டுனர் இல்லாமல் ...
ON TOW SERVICE.

### விருப்பம்

செவியின் விருப்பம் நல்லது கேட்டல்
கண்களின் விருப்பம் நல்லது பார்த்தல்
வாயின் விருப்பம் நல்லது பேசுதல் என
ஒவ்வொரு புலனுக்கும் விருப்பம் இருக்கும்பொழுது
மனம் மட்டும் தான் தன் விருப்பம் போல் நடக்கின்றது.

இரவில் பெய்த மழையும், பகலில் காய்ந்த வெய்யிலும்
பூமி அன்னைக்கு விருப்பம்தான்.
பூத்த பூ மலர, காயாகி, கனியாக பயன் தர
மரத்திற்க்கு விருப்பம்தான்.
பூமி பிளந்து வந்த மலை தன் மேல் நதி
சுமக்க விருப்பம்தான்.
இயற்க்கையின் விருப்பம் எப்பொழுதும் ஒன்றுதான்.

நாமும் ஒன்றாய்
உலக அமைதி வேண்டி எங்கு திரும்பினாலும்
அமைதி ஒன்றே எங்கள் விருப்பம் என்று வேண்டிக்கொள்வோம்.

நோயற்ற உலகம் வேண்டி எங்கு திரும்பினாலும்
நோயற்ற உலகம் ஒன்றே எங்கள் விருப்பம் என்று வேண்டிக்கொள்வோம்.

வறுமை அற்ற உலகம் வேண்டி எங்கு திரும்பினாலும்
வறுமை அற்ற உலகம் ஒன்றே எங்கள் விருப்பம் என்று வேண்டிக்கொள்வோம்.

இயற்க்கை என்றும் இயற்க்கையாய் இருக்க
வேண்டுதல் நடக்கும் என்ற நம்பிக்கையோடு வேண்டிக்கொள்வோம்.